# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திருத்தம்

### சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

### இலங்கை நில அளவைத் திணைக்களம்

*இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் பயிலுநர் நில அளவையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024*

2372 ஆம் இலக்க மற்றும் 2024, பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையின் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2024 பரீட்சை அறிவிப்பில் 5 (iv) மற்றும் 08 ஆம் பந்திகளில் விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் திகதியானது 2024.05.17 என இத்தால் திருத்தப்படுகின்றது. அவ்வாறே ஏனைய திருத்தங்கள் பின்வருமாறு :

இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2024, யூலை மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சை இடம்பெறும் திகதி மற்றும் இடம் என்பன குறித்து உரிய காலத்தில் அறிவிக்கப்படும்.

இலங்கை நில அளவைச் சேவையின் III ஆம் தரத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களைப் பூர்த்திசெய்யக் கூடிய விதத்தில் இலங்கை நில அளவைச் சேவைக்கு மாற்றமாக நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிகள் 97 இற்காக ஆட்சேர்ப்பு செய்வதற்காக பின்வரும் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (வெற்றிடங்கள் அனைத்தையும் அல்லது குறிப்பிட்ட அளவு வெற்றிடங்களை நிரப்பாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.)

| | | |
|---|---|---|
| 01 | அளவையியல் விஞ்ஞானப் பட்டதாரிகள் | 87 பதவிகள் |
| 02 | ஏனைய பட்டதாரிகள் | 10 பதவிகள் |

மேலும் 2372 ஆம் இலக்க 2024, பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதிய மேற்குறிப்பிட்ட வர்த்தமானிப் பத்திரிகையில் 1.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையானது பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

1.5.1 ஆகக்குறைந்த வயதெல்லை : 22 வருடங்கள்
1.5.2 உச்ச வயதெல்லை : 35 வருடங்கள்

"அதற்கமைய 2002.02.16 ஆந் திகதிய அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1989.02.16 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் பிறந்த தினத்தைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்க தகுதி பெறுகின்றனர்." (அதாவது 1989.02.16 இல் இருந்து 2002.02.16 ஆகிய இரு திகதிகளையும் உள்ளடக்கியதாக அதற்கிடைப்பட்ட காலப் பகுதியில் பிறந்தவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.)

**குறிப்பு :** 2372 ஆம் இலக்க மற்றும் 2024, பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையின் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2024 இற்காக ஏற்கனவே விண்ணப்பித்துள்ள 28 வயதுக்கும் அதிகமானவர்கள் மற்றும் 35 வயதுக்குக் குறைவானவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

டபிள்யூ. சுதத் எல். சீ. பெரேரா,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கொழும்பு 05,
2024, மே 03.

05-22

## திருத்தம்

### பொறியியல் தொழில்நுட்ப நிறுவகம்

தேசிய விஞ்ஞான பொறியியல் தேசிய டிப்ளோமா பாடநெறி – 2024 குழு

*2024, மாச்சு மாதம் 15 ஆந் திகதிய 2376 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் 2024 ஆம் ஆண்டுக்கான "பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா" பாடநெறிக்கான பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதை 2024.05.16 ஆந் திகதி வரை நீடிக்க கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் கற்கைகள் சபை தீர்மானித்துள்ளது.*

*இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் நிகழ்நிலை* (online) *விண்ணப்பங்கள் 2024.05.16 ஆந் திகதியன்று நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடைவதுடன் பொறியியல் தொழில்நுட்ப நிறுவன பதிவு தபால் மூலமான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் திகதி 2024.05.30 அன்றுடன் முடிவடையும்.*

*05-64*

